මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
Department of Muslim Religious and Cultural Affairs
තැපැල් පෙට්ටිය: 543, අංක. 180, ටී.බී. ජායා මාවත, කොළඹ - 10
தபால் பெட்டி: 543, இல. 180 டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு – 10
P.O.Box : 543, No. 180, T.B. Jayah Mawatha, Colombo - 10

தலைவர் / செயலாளர்,
நம்பிக்கையாளர் சபை / நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,

**அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹி வபறகாதுஹு**

**<u>ஜும்ஆ பள்ளிவாசல்கள் / பள்ளிவாசல்கள் / தக்கியாக்கள் / ஷாவியாக்கள் போன்ற வணக்கஸ்தலங்களுக்கான நிர்வாகத்தினர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக கடந்த 2019.07.09ஆம் திகதி நடைபெற்ற விஷேட வக்பு சபை அமர்வின்போது எமது நாட்டிலுள்ள மேற்படி இஸ்லாமிய வணக்கஸ்தலங்களின் நிர்வாக மறுசீரமைப்பை நோக்காகக் கொண்டு எதிர்காலத்தில் சுமுகமான பொறிமுறை ஒன்றை அறிமுகம் செய்வதற்காக வக்பு சபையின் WB/8391/2019 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் பின்வரும் தீர்மானங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

எனவே, கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்களை கவனத்திற் கொண்டு அவைகளை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வருமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

## <u>நம்பிக்கையாளர்களாக நியமனம் பெறுவதற்கான தகைமைகள்</u>

அல்-குர்ஆன் நம்பிக்கையாளர்களின் தகைமைகள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறது.

“அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளைப் பரிபாலனம் செய்யக்கூடியவர்கள், அல்லாஹ்வின் மீதும் மறுமை நாள் மீதும் ஈமான் கொண்டு தொழுகையைக் கடைப்பிடித்து ஸக்காத்தை (முறையாகக்) கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறெதற்கும் அஞ்சாதவர்கள். இத்தகையவர்கள் தாம் நிச்சயமாக நேர்வழி பெற்றவர்களாவார்கள்” (அத் தௌபா – 18)

எனவே, நம்பிக்கையாளர்களைத் தெரிவு செய்யும்போது மேற்கூறப்பட்ட அல்-குர்ஆன் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை அம்சங்களைக் கவனத்திற் கொண்டு தெரிவு செய்தல் வேண்டும்.

1. சகல ஜமாஅத் அங்கத்தவர்களையும் மதித்து அனுசரித்து நடக்கக்கூடியவராகவும் எவ்வித இஸ்லாமிய இயக்க தீவிரத்தன்மை மற்றும் அரசியலில் அதிகூடிய ஈடுபாடு அற்றவராகவும் இருத்தல் அவசியம். மேலும் பள்ளிவாசல் நிர்வாகத்தில் பூரண ஜனநாயகத்தை கடைப்பிடிப்பராகவும் இருத்தல் வேண்டும்.
2. ஏற்கனவே இலங்கை அரசால் தடைசெய்யப்பட்ட எந்தவொரு அமைப்புகளோடும் முற்றுமுழுதான தொடர்பு அற்றவராக இருப்பதோடு நாட்டின் சட்டத்திட்டங்களை பூரணமாக மதித்து நடப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

## <u>நம்பிக்கையாளர்களாக நியமனம் பெறத் தகுதியற்றவர்கள்</u>

1. குற்றவியல் நீதி மன்றம் ஒன்றினூடாக குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனைக்குட்பட்டவர்கள் நம்பிக்கையாளர்களாக தெரிவு செய்வதற்கு தகுதியற்றவர்களாவர்.
2. வக்ப் சட்டதிட்டத்திற்கமைய பள்ளிவாசல் நிர்வாகம் தொடர்பில் கணக்கறிக்கைகளை உரிய முறையில் குறித்த காலப்பகுதிக்குள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்காதவர்கள் மற்றும் எந்தவொரு நம்பிக்கையாளரும் தான் சம்பந்தப்பட்ட நிர்வாக காலப்பகுதிக்குள் வக்ப் சட்டதிட்டங்களை மீறி இருந்தால் அந்நபர் மீண்டும் நம்பிக்கையாளராக நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவராவார்.

3. பள்ளிவாசலுக்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பான பூரண விபரங்களை திணைக்களத்திற்கு வழங்குவதுடன் புதிதாக பள்ளிவாசலின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வக்ப் செய்யப்பட்ட சொத்துக்களின் விபரங்களை அவ்வப்போது திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறான தகவல்களை வழங்காதுவிடின் குறித்த நிர்வாக காலப்பகுதியிலிருந்த நம்பிக்கையாளர்கள் மீள் நியமனம் பெற தகுதி அற்றவர்களாக கருதப்படுவர்.
4. பள்ளிவாசல் சொத்துக்களை அல்லது நிதியை தவறான முறையில் பயன்படுத்தியவர்கள் மீள் நியமனம் பெற தகுதி அற்றவர்களாக கருதப்படுவர்.
5. பள்ளிவாசல் நிதியிலிருந்து வக்பு சபையின் அனுமதியின்றி புதிதாக சொத்துக்களை கொள்வனவு செய்தல், விற்றல், புனர்நிர்மாணம் செய்தல் போன்றவைகளை நம்பிக்கையாளர்கள் கூட்டாகவோ அல்லது தனியாகவோ மேற்கொண்டிருந்தால் அவர்கள் மீண்டும் நம்பிக்கையாளராக நியமனம் பெற தகுதி அற்றவர்களாகக் கருதப்படுவர்.
6. நம்பிக்கையாளர்கள் வக்பு சொத்துக்களான கடைகள், வயற்காணிகள், வீடு, வாகனம், மற்றும் ஏனைய அசையும் அசையா சொத்துக்களை வக்பு சபையின் அனுமதியின்றி வாடகை அல்லது குத்தகை ஒப்பந்தம் செய்திருந்தால் அவர்கள் மீண்டும் நம்பிக்கையாளராக நியமனம் பெற தகுதி அற்றவர்களாகக் கருதப்படுவர்.
7. நிர்வாக சபையில் தலைவர் அல்லது செயலாளராக பதவி வகித்து பதவிக்காலம் நிறைவடைந்தும் உரிய காலத்தல் புதிய நிர்வாகத் தெரிவை நடாத்தாமல் இருப்பவர்கள் மீளவும் நம்பிக்கையாளர்களாக நியமனம் பெறுவதற்கு தகுதி அற்றவர்களாவர்.
8. நம்பிக்கையாளராக பதவி வகித்த காலத்தில் இலங்கை வக்ப் சபை மற்றும் திணைக்கள தீர்மானங்களை அலட்சியப்படுத்தியவர்கள் மீண்டும் நம்பிக்கையாளராக நியமனம் பெற தகுதி அற்றவர்களாகக் கருதப்படுவர்.
9. நம்பிக்கையாளர்கள் ஜமாஅத்தினர் தொடர்பாக தண்டப்பணம் அறவிடுதல், ஊர்விலக்கல் செய்தல் மானபங்கப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் அந்நம்பிக்கையாளர்களும் மீள் நியமனம் பெற தகுதி அற்றவர்களாகக் கருதப்படுவர்.

## <u>புதிய நிர்வாக சபை நியமனத்தின் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்</u>

ஓவ்வொரு நம்பிக்கையாளர் பற்றியும்,

1. பொலிஸ் அறிக்கை (Police Clearance Report).
2. இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தினால் பெறப்பட்ட அறிக்கை (CRIB Report)
3. கிராம சேவகரினால் வழங்கப்படும் நற்சான்றிதழ்.
4. நாட்டில் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களுடன் எவ்வித தொடர்புகளுமில்லை என்பதனை உறுதிப்படுத்தும் சத்தியக் கடதாசி.
5. தொடர்ச்சியாக இரண்டு தடவை தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் பதவிகளை வகித்து இம்முறை இப்பதவிகளை வகிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் கடிதம்.

## <u>நம்பிக்கையாளர்களின் கடமைகள்</u>

1. நம்பிக்கையாளர்களாக நியமனம் பெற்றவர்கள் மாத்திரம் பள்ளிவாசல் நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அதிகாரமுடையவர்கள் ஆவர்.
2. பள்ளிவாசலினுள் நடைபெறும் அறிவித்தல்கள், தர்பியா நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகள் (Programmes) மற்றும் பிரசங்கங்கள் போன்றனவற்றுக்கு நம்பிக்கையாளர்கள் பொறுப்புக்கூறல் வேண்டும்.
3. வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் ஜும்ஆ பிரசங்கங்கள் மற்றும் விஷேட பிரசங்கங்கள் ஆகியவற்றை ஒலிப்பதிவு செய்து தன்னகத்தே பாதுகாத்து வைத்துக் கொள்ளல் வேண்டும். திணைக்களப் பணிப்பாளர் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குறித்த பிரசங்கங்களை கோரும் பட்சத்தில் இறுவட்டு (CD) மூலமாக வழங்குவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
4. பள்ளிவாசல் எல்லைக்குட்பட்ட மஹல்லாவாசிகள் மற்றும் குடும்பங்களின் பூரண தகவல்களை வைத்திருத்தல்.

5. பள்ளிவாசல் யாப்பு சகல ஜமாஅத்தார்கள், நாட்டின் சட்டதிட்டங்கள் மற்றும் வக்ப் சட்டதிட்டங்களையும் மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருத்தல்.
6. வக்பு சபையின் ஆலோசனைக்கிணங்க திருத்தங்களையும் மாற்றங்களையும் கொண்டுவரக் கூடியதாக யாப்பு தயாரித்தல்.
7. மூன்று மாதத்திற்கு ஒரு முறை கணக்கறிக்கைகளை ஜமாத்தார்களுக்காக விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்துவதோடு ஆறு மாத்திற்கொரு தடவை திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் வருட இறுதியில் முழு ஆண்டிற்குமான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை (Audited Accounts) தயாரிக்கப்பட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
8. வருடத்திற்கொருமுறை நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட வருடாந்த கணக்கறிக்கைகள் ஜமாத்தார்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவை சம்பந்தமாக ஜமாஅத்தார்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் அக்கூட்டத்தில் அதற்கான தெளிவினை வழங்கி ஜமாஅத்தார்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
9. நம்பிக்கையாளர் தெரிவின் போது பள்ளிவாசல் கணக்கறிக்கை தொடர்பாக ஜமாஅத்தார் எவரேனும் எழுத்து மூலமாக கோரும்பட்சத்தில் மாத்திரம் அன்றைய தினம் அதற்கான விளக்கத்தினை வழங்குதல் வேண்டும்.
10. உரிய காலப்பகுதிக்கான கணக்கறிக்கைகளை திணைக்கள ''சீ'' படிவத்தின் மூலம் சமர்ப்பித்து அக்கணக்கறிக்கைகளிலிருந்து முஸ்லிம் தரும நிதிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டினையும் பெற்று பள்ளிவாசல் கோவையில் ஆவணப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
11. நம்பிக்கையாளர் பதவிக்காலம் முடிவடையும்போது புதிய நிர்வாகத்தினை தெரிவு செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.
12. பள்ளிவாயலுக்குரிய அசையும் அசைய சொத்துக்களைப் பாதுகாத்து நிர்வகிப்பதும் வக்ப் சபையின் அனுமதியுடன் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதும்.

**<u>பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் உத்தியோகத்தர் தெரிவின் போது விஷேடமாக அவதானம் செலுத்தப்பட வேண்டியவை.</u>**

தெரிவு செய்யப்படும் நம்பிக்கையாளர்கள் இலங்கை வக்ப் சபையின் விஷேட அனுமதி கிடைத்தாலே அன்றி தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளை தொடர்ச்சியாக இரு தடவைகளுக்கு மேல் வகிக்கமுடியாது.

**எம்.ஆர்.எம். மலிக்**
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்